336

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீவில்லிபுத்தூர்

சௌரியப்பெருமாள்தாசர்

அருளிச்செய்த

# திருவல்லிக்கேணி

# ஸ்ரீபார்த்தசாரதிமாலை.



இஃது

சென்னைப்புரசை

**நாராயணசாமிப்பிள்ளை**

அண்டு பிரதர் அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1920. [அணா-2.

மாள்முதலிவீதி,

சென்னை.

OFFICE OF THE ... 20 OCT 1920 MADRAS

O22:38:211 TR N20

172677

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

சௌரியப்பெருமாள்தாஸர்

அருளிச்செய்த

# ஸ்ரீபார்த்தசாரதிமாலை.



இஃது

சென்னைப்புரசை

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] 1920. [அணா-2.

37, சரவணப்பெருமாள்முதலிவீதி, புரசை, சென்னை.

17261
46
170:L17

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# திருவல்லிக்கேணி

# ஸ்ரீபார்த்தசாரதிமாலை.

## கடவுள்வணக்கம்

### காப்பு வெண்பா.

திருவல்லிக் கேணிவளர் ஜெயபார்த்த சாரதிமேல
பருநல்ல நீதிதமிழ் பாடுதற்கு - திருவல்லி
தருண மிதுகாக்கச் சௌரி தமிழ்விளங்கக்
கருணைபுரி வேங்கடத்தான் காப்பு

### எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஒருவனே தெய்வமல்லால் வேறேயில்லை யுயிரெல்லா மொன்றுமே யுற்றுப்பார்த்தால், கருவிடமே வித்தொழுந்த உலகமாச்சு கதிரவனு முலகமெல்லாம் விளங்குகிற்கு, முருவான நட்சத்திரங்களிருபத்தேழி னுள்ளபடி நடக்குமல்லால் வேறேயில்லை, பரிமளம்மே திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (1)

அன்னைசொல்லே காயத்ரி மந்திரமாகு மறிந்தவர்க்குத் தந்தைசொல்லே வேதமாகும், மனனுயவஞ் டாக்ஷரஜெய மோட்சமாகும் வயங்குபன் னிருவாழ்வார் குருந்தனுவார், தன்னிடத்தில் பெருமையுற்று லவரே தெய்வஞ் சத்தியமாய் யிம்மொழியை நம்பலாமே, பனனுமவர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (2)

சுட்டாமல் வாழ்ந்தாலுஞ் சுகமுமில்லை யில்லிடத்தை விட்டேவிடு வீடுமிலில்லை, ஒபாமற் பொய்யுரைத்தாற்

சுகமுமில்லை பூருடனே பகைத்தாலு முயிர்க்குச்சேதம், தியாக மூளுமினி வனிதநியத்தில் தெளிந்தோரைச் சார்ந்திடிலோ வணுகிடாது, பாயாருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (3)

பொருளைபடைத்தோர்க்கொருபகையுமில்லைப் பொய்யுரையா மாந்தர்கட்குப் பாவமில்லை, யறிவுடனே நடப்பவர்க் கிகழ்ச்சியில்லை யடங்கிநின்ற பன்னவற்கு நிந்தையில்லை, மறமுகத்தைப் பாரார்க்கு வினையுமில்லை மனமறியாப் பொய்யுரைத்தாற் சுகமுமில்லை, பருவமுள்ள திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (4)

கொண்டவனை மதியாமற் பேசும்பெண்டு குடிக்கியம னவளைவிட வேறேயில்லை, பெண்டிரண்டு கொண்டாலுஞ் சுகமுமில்லை பெருநெருப்பு சாகளவுந் துக்கந்துக்கம், ஆண்டிநின்ற விடமதனில் மோசஞ் செய்தால் ஆயுளுள்ள வரையுமவ ரலைவாரப்பா, பண்டுமறை திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (5)

அரியதனைப் பணியாத ஜென்மமெல்லா மவலமதே யெடுத்துதினம் பூமிபாரம், மருவுமன்பர் தனக்கிடரான் துரோகஞ்செய்தால் மறுபடியுங் கடைத்தேறு மார்க்கமில்லை, உறநிமிஷ வுறவாடு மோசக்காரருறந்தனை யென்றவரை நம்பொணாது, பாவிவளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (6)

உதயத்தின் வெய்யதனிற் காயும்பேரு முத்தமரைக் கண்டுதுதியாதபேரும், மதியகன்று மூதாதைகளைச் சேர்ந்தபேரும் மன்னுநட கூட்புகைகளி னின்றபேரும், அதிகாலேற் பாலன்ன முண்டபேரு மாயுள்விர்த்தியினறிமிகக் குறைந்துபோவார், பதியான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே.

சந்திரா லத்தில்வெய்யிற் காயும்பேரும் சர்சணரக் கண்டுதாதி யாதபேரும், அநாதமிருமில்லாளை சேர்ந்தபேரு மன்னிரவிற் பாலன்னை முண்டபேருஞ், சிக்கைபகி ஹோமபுகை பட்டபேருஞ் சிரஞ்சீவியாயுளகில் விர்த்தியாவார், பந்தமறக் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (8)

வலிமையுடனேழைபொருள் பறிக்கொணாது வழக்கிருக்க வழக்கொன்று பேசொணாது, எளியாரையெதிரிட்டுக் கொள்ளொணாது யிரப்பவரை யுதாசினமாய்ப் பேசொணாது, சலியாத தூதர்களைச் சேரொணாது சற்குருவின் வாய்மொழியை தள்ளொணாது, பலிதலரு திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (9)

அங்காடி கூடைகளைப் பறித்துத்தின்றுலதனைவிட தரித்திரங்கள் வேறேயில்லை, சநகையில்லா திருந்தாலுஞ் சபையினின்று சத்தியங்களொருபோதுஞ் செய்யொணாது, தன்கணக்கை பேர்த்தெழுதி மோசஞ் செய்தால சாகளவுஞ் சுகமில்லை யலைவாரப்பா, பக்தியுளார் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (10)

புருஷனில்லாப் பூவைகுடி வாழ்க்கைசெய்தாற் புவியிலபகீர்த்தியொடு நிந்தையுண்டாம், கருஷருக்கும் புருஷனுடன் கலந்துவாழ்ந்தால் கலக்கமறு வந்தாலுங் கமறிப்போகும், ரோஷமதை யடக்காமலோர்க்குபெண்க ளுலகதனில் பட்டியெனும் வேசையாவர், பரிட்சையுடன் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (11)

மூங்காளி பேரணியன் ராவணனுமற்ற மூர்க்கரெலாங் கொர்வமதால் முழுகிப்போனார், நரகாளிந சிசுபாலன் சகடன்கஞ்சனழிந்தார்க ளவரவர்க ளகந்தையாலே, தன்னுமேல தாழ்ந்தான் பதுமாகுரன தரணியிலே யிலைமுண்டு வணங்கம்பர்கள், பன்னும

றை திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதி
யைப் பணிகுவாயே (12)

அரியதமிழ் போதித்து முதவிசெய்து அன்புட
னே மர்மமெல்லா மறிந்துசொன்ன, குருவையினி
வஞ்சித்து துரோகஞ்செய்தால் குறையாத பிணிவ
றுமைக் குடியாய்கிடக்கும், சருதணைய பெரியோர்க
ளுளத்தைக்காண சதாசிவத்தா லருமையெனச் சா
ற்றலாகும், பருவமுடன் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (13)

சாந்தகுணப் பெரியோரைச்சேர்ந்தபேர்க்குச் சஞ்
சலமும் வினைபிணியு மணுகிடாது, தாழ்ந்தவிதி கெ
ட்டதென்று காலில்வீழ்ந்தால் தள்ளிவிடப்போகாது
தருமமல்ல, சேர்ந்திருந்த குடிவாழ்வைக் கலைத்தபே
ர்கள் ஜெகமதனி லலைவார்கள் பசாசமாக, பாங்கு
டைய திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதி
யைப் பணிகுவாயே. (14)

கண்டபடி திரிந்தாலுஞ் சுகமிராது காமத்தை யிச்
சித்தால் வினைவிடாது, முண்டைகளைச் சேர்ந்தாலும்
பௌஷிராது முன்கோப நாய்களுக்குத் துணையி
ராது, சண்டைமுனை நிற்பார்க்கு உயிரில்லாது சண்
டிகளுக் கொரும்பாதுஞ் சுகமிராது, பண்டிதமாய்த்
திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்
பணிகுவாயே. (15)

அன்னதானந்தவிர தானமில்லை யரிநாமம்விடவே
றே மந்திரமில்லை, சொன்னவஷ்டாட் சரமொழியே
மோட்சமாகும துணையான வாழ்வார்கள் முகுந்தனா
வார், தன்னிடத்தில் பொருமையுற்றால் தருமனாவார்
தைரியமுள புருடனே தனஞ்செயனையாவார், பந்து
மறை திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதி
யைப் பணிகுவாயே. (16)

பொருள்தேடி யுண்ணாமற் புதைத்துவைத்தாற்
பொருளகாக்கும் பசாசமென சொல்லலாகும், பிரு

ணடர்ந்த மூடருக்கு வாழ்விராது யிதக்கமில்லா கண்டகர்க்குச் சுகமிராது, மருள்பிடித்த காமுகர்க்கு வினையிராது மார்க்கமற்று நடப்பவர்க்கு வன்பிராது, பருவமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (17)

மதியாதார் வாசல்வழி மிதிக்கலாமோ மனமில்லா வீட்டிலன்னம் புசிக்கலாமோ, சதிசெய்யுந் துரோகிகளைச் சேரலாமோ தமயனையுமனை நோகப் பேசலாமோ, வதிதிகளை யுதாசினமாய்ச் சொல்லலாமோ வாசாது பொருள்கவர்ந்து வலையலாமோ, பதியான திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (18)

கொள்ளையிடுங் கள்ளருடன் கூடலாமோ குடியருடனுறவாடி யிருக்கலாமோ, அள்ளியிடும் பிச்சைதனை விலக்கலாமோ அசலுடைமைக் காசைப்பட்டு வலையலாமோ, பெண்டுபிள்ளை பொருள்மனையும் நம்பலாமோ புவியிலெவெகு வுபாயமதாய் பிழைக்கவேணும், பண்ணுதமிழ் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (19)

மனமறிந்து பொய்சொன்ன லடடாபாவி வாழ்வதென்ன வதனாலே மகிட்சியென்ன, வனுசரிக்கு நேசர்கட்கு துரோகஞ்செய்தா லாடுபன்றி கோழியைப் போலழிந்துபோவார். தனதான குடித்தனத்தைக் கலைத்தபேர்கள் சாகளவு மலைவார்கள் பசாசமாக, பஹுவாகத் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (20)

வஞ்சகமே யனுதினமுஞ் செய்துசெய்து வாழ்வதனாற் பலனென்ன மகிட்சியென்ன, கொஞ்சமெனு மெண்ணாத பாவிநெஞ்சே கொடிதான நரகத்தி லழியப்போறாய், தஞ்சமென்று நல்லோர்களைச் சேர்ந்தாயாகில் சகலகலை ஞானமது தரிக்கச்செய்வார், தஞ்சனவே திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (21)

நல்லவர்க்கு கோபமில்லை பெருமையில்லை நற்கதிக்குச் சமயமிதுவே பட்சமுண்டு, நல்லவர்தூற் குணமே பூஷணங்களாகும் வையகத்திலவர்பெருமை சிறிக்கலாகுஞ், சொல்லினுமே யவர்குணம் வேறதாகுஞ் சோதித்தால் நல்லோராற் கருணைலாகும், பல்லுயிர்களேத்துமல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (22)

உத்தமர்போல் வேதாந்தம் பேசிப்பேசி யுறுதியளோர் ஓர்பூசை செய்யலாகும், கற்றறியு மோனைமுகவில்நுத சாட்சப்பூசை கலியுகத்திலிவர்கள்சில வேலைக்காரர், சித்தியுளப் புனிதருக்கு வெறிதானன்றோ திக்கெங்குந் திரிவார்கள் பேயனைப்போற், பத்திவளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (23)

வாக்கியமே பெரியோர்சொல் வேதமாகும் வரிசைமுறை தள்ளாதவரே யோக்கியமாகும், யோக்கியமுடனடப்பவரே மறையோராவார் உதவிசெய்யும் புண்ணியரே தெய்வமாவார், போக்கியமுடன் புசித்தென்ன யியாப்பாவி பிணமதனுக் கிடுபிண்ட சாதமாகும், பாக்கியமே திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (24)

குளித்தென்ன குழைத்தென்ன பூசித்தென்ன கும்பிட்டுக் கண்மூடி ஜபித்தாலென்ன, களிப்புடனே கேட்பவருக் கிபவேணும் கருத்தைநிலை நிறுத்திமெய்யைக் காணவேணும், ஒளித்திருந்து பேசுகின்ற பாவிகட்கு ஒருபோதுஞ் சுகமில்லை யொழிந்தநெஞ்சே, பனிகணைய திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (25)

சாபமதாற் பொல்லாங்கு வந்தால்நல்லோர் சற்குருவாயவனை மெல்ல விளக்கிக்கொள்வார், சேபமுடன் காமத்தைக் கலந்தபோதுங் குட்சமதாய் கருக்கிலதை நீக்கிவெல்வார், கோபங்கள் பிரண்டாலு

மகாத்துமாக்கள் கடுகெனவே வதனைவெல்லக் கண்டு
கொள்வார், பாபமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (26)

வழக்கிருக்க வழக்கொன்று பேசிப்பேசி வாரியதே
ன் னிலாத வண்ணமனெஞ்சே, ஒழுக்கமுடன் பெரி
யோரை யிகழ்வாய்ப்பேசி யுலகதனிலென்னமிருபெ
ருமைபெற்றாய், அழுக்கடைந்த மாதர்குழிக் கிச்சை
வைத்தே யழிந்தாயினிப் போகாதே யறையக்கேண்
மே, அழகான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனி
ட சாரதியைப் பணிகுவாயே. (27)

தன்னைத்தான் புகழ்வாரே பசாசமாவார் சற்குரு
வை மதியாதார் பிரேதமாவார், நன்மைகுண மில்லா
தார் மூடராவார் நாரணனைத் துதியாதார் நரகஞ்சே
ர்வார், வண்மையுடன் பாகவதம் படிக்கபேர்க்குவை
குந்தபதவியது சொந்தமாகும், பண்ணிருவர் புகழும
ல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணி
குவாயே. (28)

ஊர்க்குண முண்டானு லுயிர்க்குச்சேதம் மோக
மதுவத்தனையுமரோகமபபா, மார்க்கமறியாதவற்கு
கியானமில்லை வழிதப்பி நடப்பார்க்கு கீர்த்தியில்லை,
வேர்த்தவுடற் பாடுபட்டு தருமஞ்செய்யார் வேட்ட
கத்திலனைமுனும பாவியாவார், மார்க்கமுறுந் திரு
வல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணி
குவாயே. (29)

எவ்வுலகு மோர்குடைக்கீ ழாண்டபோது மிரந்
தொழிந்து போவால்லா லிருப்பாரில்லை, யிவ்வுலகில்
நீமாத்திரஞ் சாகேனென்று மெண்ணமதை விட்டு
விடு மேழைநெஞ்சே, தெவ்வுலகத் தெமதூதர் வந்
துவிட்டாற் றிருடனைப்போல் கீழ்மேலு முழிக்கப்
போறாய், பவ்வுலகத் திருவல்லிக் கேணிவாழும பார்
த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (30)

ஆபத்தை யொழித்தவரை யெண்ணாவஞ்சரலைவார்க ளொருபோதுஞ் சுகமிராது, கோபத்தைப் பாராட்டும் நாய்களுக்கு குவலயத்தி லும்வாத துரோகஞ் சாரும், தீபத்தை யாலயத்தி லவித்தபேர்கள் தீராத கொடுநரகஞ் சேர்வாரப்பா, பாபத்தைபோக்குந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (31)

மனையாள்சொற் கேட்டினிதாய்க் கெட்டபேர்கள் வையகத்தில கோடான கோடியுண்டு, தனியான வுத்தமிமே லாசைவைத்து தரணியிலே கெட்டவர்க ளனேகருண்டு, யினிநான சூதாடி யழிந்தபேரை யிவ்வளவவ்வள வென்றெண்ணொணாது, பணியனுகா திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (32)

அடங்காத முண்டைகளாற் குடிக்கிநாச மஞ்சாமல் சபையில்நிற்பார் பழிக்குமஞ்சார், அடங்காமற் பேசுகின்ற மடையரோடே வாய்கொடுத்தால் மோசமப்பா பௌஷிராது, ஒடுக்கிவழி நடவாத பெண்டைக்கொண்டா லுள்ளளவுந் துக்கமது வுயர்ந்தேநிற்கும், பங்குலவுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (33)

உத்தமர்க்கு வறுமைமிக வந்தபோது முள்ளமிகக் கலங்கார்கள் பகிட்சிகொள்வார், சத்தியமாய் நடப்பவர்க்கு யிடரேவந்தாற் றவிரார்க ளொருபோதுஞ் சத்தியத்தை, குற்றமதை நல்லோர்க்குப் பொல்லார் செய்தாற் கோபமதை யுள்ளளவுங் காட்டமாட்டார், பதிவளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (34)

முழுதுணர்ந்தோ ராயினும பொறுமையில்லார் முனிவருஞ் சாபத்தை விலக்கமாட்டார், அழுதழுது புறண்டாலுஞ் சபலசித்த ரனுபோது முள்ளமதை திறத்தமாட்டார், வழுவல்லாச் சற்சனருக்

கெதுவந்தாலும் வாழ்நிலைவைப்பா ரனுகாமன் மன்னினாலே, டழுதில்லாத திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (35)

வெட்கமில்லா மோகிகட்கு புத்திசொன்னால் வெள்ளரிக்காய் கதையாக முடியுமப்பா, வக்குவிதாக்குமில்லாற்கு முறைநசனுண்டோ வடங்காத முண்டைகளுக் கெதிருமுண்டோ, கைக்கடங்கா முதநமிக்குப் பெருமையுண்டாங் கடுமைவந்தா லுலகமெல்லாங் கலங்கிப்போகும், பக்குவஞ்சூழ் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (36)

கொண்டவன்சொற் கடுத்தலவும் பெண்டுதன்னை கொடிதான பிணியெனவே கூறலாகும், அன்னடினற்கு தருமமது கணவன்செய்தால் அழிக்குமவ னானவன் மகிட்சியென்ன, கண்டவர்க்கும் பிள்ளைபெண்களதிகமாகிக் காலினியி லுண்டாகுங் கருதிப்பாரே, பண்டையுள மறைபுகலுமல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (37)

அரியரனைப் பேதமதா யெண்ணுபேர்களெல்லவர்களல்கைகளைப்போல் மோட்சமில்லை, கருவாமரசவாத சிலபிந்து கட்டிவிட்டால் மூதேவி கைவிட்டேகாள், உருவான காயமதை விர்த்திசெய்தா னுள்ளபடி ரசவாத முடியுமப்பா, பரிவுடைய திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (38)

கொண்டபெண்டை சோரனைவைத்துக் கூத்தியாண்டால் குடிவாழ்க்கை யுதவாது வியாதிசொந்தம், கண்டவனை யுறவாடி காமத்தாலே கணவனையே பிரிந்து கொடுந் துரோகஞ்செய்தாள், ஒண்டிபனை மாத்திறுறும் பசாசமாவா ளுழலுவளா யொருபோதுஞ் சேர மாட்டாள், பண்டிவரும் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (39)

மக்கள்பெண்டு தன்வாழு மனதிலெண்ணி வழக்காடி பாலை யிட்டுப் பொருளைத்தேடி, நிற்குமென்று

பொங்காதே பாவிநெஞ்சே நீயேகும் வழியுனக் குகவியாமோ, இக்குமிகு வஞ்சமது செய்துகெட்ட திருடர்களைப் பார்த்திருந்து மட்டாதமபி, பக்குவர்சூழ் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (40)

சந்ததமும் ஸ்திரீகள்தமைச் சேர்வார்தங்கள் சரீரமிக மெலிந்துவிடு மழகும்போகும், விந்துவிட லுடலெல்லாம் வெந்துபோகும வீரியமு மற்றுமே மெலிந்துகேளா, சிந்தையது நிலையாது வறுமையாலே தீராதபிணியுற்று திகைக்கப் போனாய், பந்தமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (41)

முற்றிலும்வா சித்துணரா மோழைகட்கு முண்டைகட்கு வாய்மதத்தா லகந்தையுண்டாம், வைத்த தமிழ்க் கரைகண்ட பெரியோரெல்லாம் வணக்கமுண்டு தனைபுகழ மாட்டாரப்பா, அத்தியது பேசலுடலம் பருத்துவெய்ய ரகந்தைமிகப் பேசியவழிந்துபோவார், பத்தியுடன் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (42)

ஓரெழுத்தைச் சொன்னாலுந் தெளிந்தசீடனுள்ள நாள் வரைக்குப்பூசைசெய்வார், ஈரெழுத்தை பலகாலுமூடர்க்குச்சொன்னால் சிந்தையது நேர்வதல்லாறு சுகமிராது, வேரெழுத்தைக் கண்டோரை நேசச்செய்தால் வெந்தனலால் மூண்டேகி ழிந்துப்போவார், பார்மகிழுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (43)

எண்ணியெண்ணி நெஞ்சலர்ந்து போவதல்லா லேழைமதி யதனாலே யாவதென்ன, குண்ணிகுண்ணி யழுதாலு மாவதுண்டோ கொழுத்துமுன்பு செய்ததெல்லாம் வீணாய்ப்போமோ, நண்ணியெண்ணி செய்யாயல் போனபாவி நமன்கையிற் படப்போனாய் நானிதான், பண்ணியுறு மாலைவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (44)

வெட்கம்விட்டமோப்பிகட்கு துரைசோரென்பார்
வெளிப்பட்டால் தெரியுமந்த பேச்சுதானே, அக்கு
தொக்கு மில்லாத வெண்களப்பா வாளனுக்கு வண
ங்கிதனி பேசமாட்டார், நக்கியெனும் நாய்களுக்கு
வெட்கமுண்டோ நால்வர்நகை செய்தாலு மீனமுண்
டோ, பக்குவர்சூழ் திருவல்லிக் கேணிவாழும் பார்த்
தனிட சாரதியைப் பணிகுவாயே. (45)

நடக்கையெலாங் கார்நடையாய் நடந்ததுரோகிநடு
நிலையாய் சபைதனிலே நீதிபேசி அடுத்தவரைக் கா
ராமற் பணத்தைச்சேர்த்து வதனுலேநீவாழ்ந் திருந்த்
ததென்ன, கடுத்தமுகம் பெரியோர்முன் கோபஞ்
செய்து கண்காட்சி யென்னகண்டாய் நெஞ்சேகூற்
றின், படர்சஞ்சா திருவல்லிக் கேணிவாழும பார்த்
தனிட சாரதியைப் பணிகுவாயே. (46)

முன்வருங்கா ரியத்தையெண் ணமற்செய்தால்
மோசம்வரும் பின்னுலே மூழ்கிப்போவாய், தன்னிட
த்திற் மகிமைமிக யிருந்தபோதுந் தாழ்ந்துலகில் நட
ந்தாலே விளங்குமப்பா; சின்னவெல்லாஞ் சங்கிதமாய்
செய்வார்நல்லோர் சிறுமிஷமாய் நினைத்தவர்க ளழிந்
துபோவார், பன்னுமறை திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (47)

ஆரியகூத்தாடி னுமோசமுசாரத்தி லகப்பட்டோர்
வெறியனைப்போல் தேறமாட்டார், காரியத்தை மற
வாதே மோசம்மோசம் கடைவழிக்கு மிதுகளெல்லா
முதவாதப்பா, வீரியத்தை பேசியவர் பொறுமையுற்
றல் வெகுளியைப்போற் றிரியாதே யுன்னிப்பாரு;
பாரினுயர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட
சாரதியைப் பணிகுவாயே. (48)

குடியனைப்போல் வெறியனைப்போல் குழந்தைபோ
லும் குறியற்ற பெரியோர்க ளிருந்தபோதும, வடிய
ன்னம பூக்கிருக்குந் தணலின்மீது வைப்பாரோ கை
யதன்மேல் மோசம்மோசம, கடமைவிட்டுப் யொரு

பொரு பளிநெஞ்சே கண்ணனையே தியானிக்கின் மோட்சமுண்டாம், படிபுகழுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (49)

ஆங்கார காலமதி லகந்தைசெய்தா லத்தனையுந் தம்பியடா வீணாய்ப்போகுஞ், சாங்காலம் வருபோது யினைவதெல்லாஞ் சத்தியமாய் வினையாக மூணுமப்பா, நீ கமலரிநாம மந்திரத்தை நிர்மலமாய் நினைவுற்றால மோட்சமுண்டு, பாங்காருந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே,

நல்லோர்கள் பொல்லாதது செய்யச்சொல்வார் நம்பியதை செய்தாலே தாயிம்களா, செல்வமுண்டு கீர்த்தியுண்டு புண்ணியமுண்டு ஜெகத்திலிதைக்கேட்போர்க்கு மோட்சமுண்டு, பொல்லாத நன்மொழிதான் சொன்னபோதும புகழ்ச்சியில்லை கீர்த்தியொடு புண்ணியமில்லை, பலலாண்டே யோகுவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (51)

தேசமதிற் சாலங்கள் மகாத்துமாக்கள் செய்வார்கள் நாமதற் குய்ம்வாமாகில், ஆஸ்பதமாய் நரகத்திலிறந்துபோவா யவர்களுக்கு பேதமில்லை யாவுமொன்றே, வாசமுறும நல்லோர்கள் பகிமைகாண வையமதி லவர்களுக்க பரிதுசொன்னேன், பாசமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (52)

பொய்யுலவும்பெண்களுக்குக்கோபமுண்டாம் பொங்குபுனல காட்டிசத் தியமுஞ்செய்வார், மெய்பேசு மூத்தமிக் குயிர்போனாலும் வெளிபட்டே சத்தியத்தை விரும்பமாட்டார், கையுதவிசெய்பவர்களை பெருமைபேசார் கடைகெட்ட வுலுத்தர்கட்கு வாயண்டாகும, பையரவத் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (53)

சதமான பெருமைதனை மறக்கவேண்டாம் சத்தியத்தை யொருபோது மழிக்கவேண்டாம், மதமான

ஹங்காரங் கொள்ளவேண்டாம் மர்மமுள்ள மந்திரத்தை விரிக்கவேண்டாம், யிதமுரைச்குபவிணாசெவிலைக் கேட்கவேண்டாம் ஈனருட னுறவாடித் திரியவேண்டாம், பதமாருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (54)

அன்பின்றி பூசைமுகத் தென்னலாபம் ஐயமிடாரிருந்தென்ன வுதவியாகும், தன்மையில்லா தருமமது விளங்காதப்பா தானென்னு மாண்மையுளான ஞசமாவான், மின்மையினிற் செய்தவொரு நன்மைதானமை யெள்ளளவும் போகாமலனுகுப்பா, ப[illegible]கழ் திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (55)

நிச்சயமா யெனவார்த்தை கேட்பாயாகில் நீபோகும் வழிகளுக்கு மோட்சமுண்டாம், அட்சயமாம் பொருமைதன சத்தியங்க ளன்னை தன்னைக் கைக்கொண்டா[illegible]ற் றெய்வமாவாய், லட்சணமாய் பெரியோரைச்சார்ந்தாயாகில நரகமற்று மோட்சமுண்டு நம்புகாப்பு, பட்சமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்ததனிட சாரதியைப் பணிகுவாயே. (56)

இடியதுபோ லேழைகண்மேற் பழியைச்சாற்றி யெனனபலன னுபவிப்பாய்வையமீது, வடிவமிகுதனக்குநல்ல காலம்வந்தால் மண்மீது வுபகாரஞ் செய்யவேண்டும், கொடியமகா பாவியென்று பெயரைத்தேடி குவலயத்தி லெனனபலன் காணப்பெறாய், படிபுகழுந் திருவல்லிக் கேணிவாழும் பாாததனிட சாரதியைப் பணிகுவாயே. (57)

உத்தமர்சொற் பொருளுடையோர் கேட்கமாட்டார் உடலமதில் வலுவுளம்ளா ரொடுங்கிப்பேசார், சத்தியத்தை நினையாற்கு வாழ்விராது சபலசித்தப் பேய்களுக்கு துக்கஞ்சேரும், பத்தியுள்ள மாணவற்குக்கிலேசமில்லை பணபுளா சொல்லொருகாலும பழு

17267

திராது, பத்திவளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்
தனிட சாரதியைப் பணிகுவாயே. (58)

ஆவென்றே வாய்திறக்குஞ் சோற்றுறக்கண்டா லெ
ண்டசார சரமாகும்புவகையமல்லம், தேவிமிசை வரு
சிவனுறை காணாமல்லார் ஸ்ரீகிருஷ்ண மகிமைதனைச்
செப்பக்கேண்டோ, ஓமெனவுமஷ்டாட்சரத்தைவிட
வேறேயிலலை வுறுதியாய் கம்புரீயுஞ் சொன்னேன்
சொன்னேன், பாவனமே திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (59)

.ரவென்று சடலத்தை நம்பவேண்டாம் உதவாது
..த்தியதிலேமைமறெஞ்சே, மரமேழுந் துளைத்த
பிரானடியைப்போற்றி மாளாய்நீ சிரஞ்சீவியாகவா
ழ்வாய், வாமெனறு சொல்வதரி மந்திரமாகும் மறு
வாமலெப்போதுந் தியானஞ்செய்வாய், பரமென
னுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதி
யைப் பணிகுவாயே. (60)

ஆங்கார மதமெல்லாங் கொஞ்சகால மறிந்திருந்து
பேரொளியை நினைக்கமாட்டார, தீங்கான செயலதனை
னைக் கண்டுந்துஷ்டர் சிந்தையிலே யணுவளவு நீக்க
மாட்டார், வாங்காதே யருகிருந்து நல்லோர்சொல்லை
மனமுற்றுந் தெளியார்கள் மடையரப்பா, பாங்கான
திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப்
பணிகுவாயே. (61)

மெய்போலே பேசுவார்கள் மிரட்டையெல்லாம்
வீணரவர் வேசைகளைக் கெடுக்கவெண்ணி, கைமீது
கைபோட்டுக் கொடுப்பாரந்தோ கைப்பொருளைப்
பறிப்பதன்றி யவளைக்கூடப், பொய்யாலே வருவதெ
ன்ன வலைநதமெஞ்சே போதனையை யுப்த்துணர்ந்த
மாலைபோகிய, பையணையிற்றிருவலலிககேணிவழும்
பார்ததனிட சாரதியைப் பணிகுவாயே. (62)

ஏழைகண்மே லஞ்சாமற் பழியைப்போட்டு யில்
லையென கூலிதனை யெடுத்துக்கொண்டு, வாழ்வதெ

ன்னையிப்புவியி லனித்தியத்தில் வைத்தயெங்கே போவாய்நீ மடமைநெஞ்சே, கோழையுடன் சேப்பமது கட்டிக்கொண்டு களைத்துயிர் போகுமடா பாவிநெஞ்சே, பாழியுடன் திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (63)

மாடுபோற்சுமைகூலி கொடாதபாவி மன்னூராசுவாமிக்குப்பிரதாக கன்னக்கள்செய்து, ஆடுவெட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து ஆவதென்ன வஞ்ஞானலே வலைந்தநெஞ்சே, தேடுகிறை றபொருளதனைத் தருபஞ்செய்யார் தேவியர்க்குச் சேர்த்துவைத்தால் மாசுமபோகும், பாடலுறந திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (64)

களிப்புடனே வோதிவைத்த குருவுக்கியார் கடைகேடாய் முடிவதனில் நாசமாவார், அனுசரிப்பர் நேசர்கள்கை யடித்துப்பின்னே யதைமறந்தா லாசார மன்னர்செல்வார், சனியனிடர் வந்தாலுந் தந்தை தாயை தள்ளாம லன்னவரைக் காக்கவேணும், பனியணுகாத் திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (65)

தேங்காத பெரியோர்சொல் லமுர்தமென்று திருடர்களுக் கறிந்துகொளுந் தெளிவுமுண்டோ, நீயெகாதகாமுகற்கு தியானமுண்டோ நிலைகாணு மூடருக்கு விவேகமுண்டோ, வாங்காத துன்மார்க்கப் பேய்களுக்கு வழிகண்டு நிலைசாரும் வண்ணமேது, பாங்கான திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (66)

வேசையர்கட் கதிகமாய் ஞகிற்நேர்ந்து வேடமது தரித்துகண்ட னென றுகூறத், தோஷியவள் மெய்யென்றே யவளைநம்பி தொண்டுசெயும் விதக்கடனை சொல்லொணாது, பேசிடவே முனிவதனி லென்னகண்டாய் யிலவுகாத்தகிள்ளைபோலாளுளநதோ,

பாசமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட் சாரதியைப் பணிகுவாயே (67)

கற்றோர்க்கு மனங்களிக்க பணிகள்செய்யார் காமுகர்க்குப் பணிவிடைகளனைத்துஞ்செய்வார், சுத்த மகாத்துமாக்களுக்கு தொண்டுசெய்யார் குலகற்றபுலையருக்குத் தொழும்புசெய்வார், மெச்சமெத்த கர்மமதை யிகழ்ந்துகொள்வார் வெறிபிடித்த பேய்களின் விதங்களப்பா, பத்தர்தொழுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே ()

தலைமுழுக்கு நாள்மூன்றில் ஸ்திரீகடன்னைத் தட்டமாடி வியாதியினாற் சமதியாவார், பிலமென்று மனப்போனபடி நடந்தாற் பிரியாத பிணியடைந்து பசாசமாவார், நலமென்னும் பெரியோர்சொல் கேட்பதெல்லாம் நரகதியமிருமதனிற கீர்த்தியுண்டாம, பலனுதவுந திருவல்லிக கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (69)

எண்ணெய்யிட்டுத் தலைமுழுகிக் கலவிசெய்தால், இறந்திடுவாய் சமர்த்தோடும் பேசவேண்டாம், தண்ணியது மூனறுபிறை பொறுக்குமப்பா தலைமுழுக்கு வொரேவிசையாற் றப்பாமற்வகாலனும, பன்னூவிலக்கமது கண்டுதொழு மாளளவு மெய்வாதை தீரதப்பா, பனனினிர் திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (70)

காமத்தால்மகிழ்ச்சியென றஞ்சந்தோஷமென்றுங் கண்டதப்பா தீராத வியாதியாகும், காமத்தால் முன்னாலே கெட்டபேர்கள தரணியிலே யனேகருண்டு சாற்றொணாது, நேமத்தா லபிபரானைத் தியானஞ்செய்தால் நிமலமாய் பதவியதைச் சேர்ந்துவாழுவார், பாபத்தை தவிலாகும் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (71)

மூர்க்ககுண துன்மார்க்க சேட்டையெல்லா முன்னுக்கு விபம்பாது காட்டுமப்பா, மார்க்கமீதென றதி

பாத கசடரெல்லாம் வல்லமையாய் வீண்பேச்சு பேசுவார்கள், ஏர்க்குமோ மூடருரை வையகத்தி லெல்லாருஞ் சுகமில்லா துக்கமாகும், பார்க்கவருந் திருவல்லிக் கேணிவாழும பார்த்தஸாரதியைப் பணிகுவாயே. (72)

வெறியனைப்போல் மூர்க்கனைப்போல் குழந்தைபோ லுருகாட்டி வலிமைபேசி, நெறிகுறிக ளதைக் காண்பதல்லாவேறு நிந்தைகூடு நேசானாலும் பாவமப்பா, பெரியோர்கள் குணமதுமேவா வணந்தரூபம் பேய்குணத்தால் நம்மாலே யறியவில்லை, பரவிலுயர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தஸாரதியைப் பணிகுவாயே. (73)

வெறியர்மத்தர் காமுகர்போற் குழந்தைபோலு மெய்பனைப்போ லூமையைப்போல மேலோர்தாமவளர், நெறிகுறிக ளதைக்காண நம்மாலில்லை யாகமதைநீயே நினைக்கவேண்டாம், பெரியோர்கள் குணமறிய வணங்கமுண்டு பிசாசகிரர் மாதரைக் காணமாட்டார், பரவிலுயர் திருவலலிக் கேணிவாழும் பார்த்தஸாரதியைப் பணிகுவாயே (74)

மனாடித்துப் பொருள்தேடி வீட்டில்வைத்தா லுனக்கென்ன லாபமதில நாகமலலால், மாரடித்து யழுதகமுத யடடாதுரோகி வாழ்வதென்ன வேழைப்பொருள் விஷமேயல்லால், ஆர்படைத்தி யார்வாழ்ந்தார் பூமிமீதி லறிந்திருந்து மென்னவுந்தன் வஞ்சநெஞ்சம், பார்படைத்த திருவல்லிக் கேணிவாழும பார்த்தஸாரதியைப் பணிகுவாயே. (75)

கிலேகாறு சமுசாரக் கடலிலாழ்ந்து நீந்துவதேன் கரையேற வுனதாலாமோ, விலையாதர் செய்மோக வலையுட்சிக்கி மீளாமலெந்நாளு மழிந்தாயப்பா, நலமான பெரியோரைச் சார்ந்தாயாகில் நகைசேரு முத்தியாம நிலையைச்சொல்லவார், பலர்ஞானக்குந் திருவல

லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு
வாயே (76)

அழகிருந்து முடல்பருத்து மந்தமுண்டா யமரிக்
கையுள்ளவள்போ லடங்கிப்பேசி. முழுகிமுக்காற்
குளித்தாலு மென்னலாபம் மோகமதால் வெறிகொ
ண்டு திரியுமாதர், எழலகன்ற நாய்போல வீதிதோ
றும் மிழந்தகதை போன்மாதர் புத்திகண்டாய், பழி
யகலுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சா
ரதியைப் பணிகுவாயே. (77)

இலட்சணமா யிருந்தென்ன பாரகனி கல்லளா
யிருந்துமென்ன வபத்தைதன்னி, லிட்டமுடன்
முறையில்லாப் புருடர்சம்மை யிச்சிப்ப தாலெகிடை
க்கும் லாபமென்ன, சஷ்டமுள்ள வெமபுரத்திற் றா
தருன்னை சட்டியடித் திழுப்பதல்லால் சருதிப்பாரா
ய், பட்சமுறுந் திருவல்லிக் கேணிவாழும பார்த்த
னிட சாரதியைப் பணிகுவாயே (78)

மெய்போலே கணவனுக் கிதவுபேசி மேன்மேலு
முறவாடி வேண்டிக்கொள்வார், நெய்யாலும் பாலா
லு முபசரித்து நேர்மைபெறக் கும்பிட்டு நித்திரை
கொள்வார், ஐயையோ பாவியிவள் மனதையெல்லா
மறியாம லவளிலேயி னிற்பமேகனே, பையரவி னடித்
தோன்வா ழல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சார
தியைப் பணிகுவாயே (79)

கெருவிலே யமர்விளைக்கு மோப்பிகட்கு தயவேது
பயமேது தெய்வமேது, யிருநிலத்தி லவர்க்கொருவர்
நிசமேது கணவனுக்கு பஞ்சவளோ வஞ்சாளப்பா,
மருவி மனனைச் சுகிக்கும வண்மைவிட்டே மாதலர்க்
குத தொண்டுசெய்யும் வழியைததேடு, பருவமுயர்
திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்
பணிகுவாயே. (80)

அடிபாவி சண்டாளி கணவன்றன்னை அஞ்சாமல்
வஞ்சித்து கபடபேசி, வடிவில்லா முடனுக்கு வேண

தீந்து மனமகிழ்வா யிச்சித்தே மானமற்று, முடுகியு
யிர் வேளை தனனில் முழிபிதுங்கி யமபுரத்திற் சுழல
ப்போமாய், பழிபுகலுக திருவல்லிக் கேணிவாழும பா
ர்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (81)

கள்ளமனப் புருடராது வறவுகொண்டே கட்டியவ
ளானந்தசுகஞ் சுழலப்போமே, எள்ளளவு மிரக்கமி
ல்லா தூதர் தம்மா லெமனுலகி லெரிதழுலச் செய்வ
ரந்தோ, வுள்ளபடி யநுபவத்தை யெடுத்துச்சொன்
னே னொருவராயு மிடுவதிலை யுறுதியாகப், பள்ளி
கொள்வான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட
சாரதியைப் பணிகுவாயே (82)

தன் கணவன் மன்மதனைப் போலேயோங்க சற்ப
னைசெய் சண்டாளி தரணிமீது, கன்மமிகு வருமிட்
டுப் பொருளைத் தந்தே காதலுடனோ வவளைச் சேர்
வதெனனே, அங்கிதமா யெமபுரத்தி லிவளையந்தோ
வக்கினியிற் றள்ளுகையபிற றுன்பையார்செய்வார், பன்
னரிய திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதி
யைப் பணிகுவாயே. (83)

கொண்ட கணவனைக் கருதாமல் மோசஞ்செய்யும்
குடிகேடிகளைமதி லில்லைகளவிண்ண, கண்டபடிகண்
டவரைவழிகளாட்டி கடைகெட்ட நாய்களைப்போல்
கலப்பதெனனே, கெண்டனைகளிவட்கு எமலோ
கத்திற் செய்வதெல்லா மாகினிளறமீளாதப்பா, ப
ண்டுமறைபோயாதுமல்லிக் கேணிவாழும பார்த்தனிட
சாரதியைப்பணிகுவாயே. (84)

கொஞ்சத்துக் கொருவர்பொருள மீதிகொண்டா
ல் குவலயத்தில் குடிவிளங்க மாட்டாயப்பா, வஞ்ச
கமேமண்மீதுசெய்து நீயும் வாரியதென னனினுகிலா
மடமையேயாமே, கெஞ்சு றியாப்பொய்யுரைததோற்றி
குருகுலிற்காள கிச்சயபா யெண்மொழியை நம்புநீயும்,
பஞ்சபஞ்சேர் திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட
சாரதியைப்பணிகுவாயே. (85)

ஊனரையடித்தடாபாவியுலையிற்போட்டு வள்ளளவுந்தீராதவினையையுற்றாய், போரடிக்குங்களத்தினிலே திருடியுண்டாற் பூவுலகிலுள்ளளவும்பெருமையில்லை மாரடித்த வேழை னை நோகச்செய்தால் மகத்தான நரகமப்பா மாண்டபின்கோ, பாரடிதமேதோரேகது திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே (86)

இச்சையுட னொருவனையே மணம்புரிந்து யின்பமெலாந்தனிலேதிப்போ லனுபவித்தே, மச்சமறவதனைபிதராளுக்கொப்பாயப்பா னெனவறைவதென்கொலடங்காப்பாவி, லச்சையிலாள் மனமபோன படிநடப்பாள் ராச்சியபதி லவள்நடைக்கோ ரெதிருமில்லை, பச்சைசிறமாலோங்குர் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (87)

பிரளயத்திற்கூசாம லிருட்டுவீட்டில் பிரிமாய்ஒருவனிடமிருக்கும்போது, வருத்தமுட னவள்புருஷன் கண்டுமேயச வாய்புதைத்துபபேசாம லெழுந்துசென்றாள், கருத்திலினியவனையிவ ளப்பனெனம்றார் கண்காட்சியைய்கண்டு கணக்கோவையா, பகுதிலகுநதிருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (88)

ஏழைகளு மழுதகண்ணீர் வீணாய்ப்போமோ எப்போதுமுன்குடிக்கு நாசமுண்டாப, வாழ்வதனைச் சதமெனவே வகந்தைபேசின மாள்ளவுதுகசமுறஞ் சகமிராது, கோழையுளார் தமையடித்துப் பறித்துத் தின்றூற் குவலயத்திலுள்ளளவுங் குறைப்பாவம், பாழியுநற திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே. (89)

மனையாட்டி மகிழ்ச்சியுற வார்த்தைபேசி வாழ்வதென்ன வதனுமேல முயற்சியென்ன, வினிதானபெரியோர்சொல் கேளாதாலே எப்படியுங்கடுவருங் கீர்த்திகுன்றும், சனியான துர்நடையாய வுலகிலுள்ள

சகலர்களும் நகைசெய்யு முடல்தானுகும், பனிமலர் சூழ்திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (90)

புண்ணியர்கள் பொருள்மீது இச்சை வைத்தால் பிள்ளைபெண்களொருபோதும் விர்த்தியாது, வெண்ணிமன மறிந்துலகில் மோசஞ்செய்தாலதைவிடவும் பாபங்கள் வேறேயுண்டா, மண்ணுலகில் செனனமெலாந் திரிந்துமென்ன வண்மையுடனொருபோது மிருந்தாலென்ன, பண்ணுலவுந்திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே (91)

முழுகியபின் னுடம்பெல்லா மஞ்சட்பூச மோப்பிகளும் பசித்தவருக் கன்னமீயார், ஒழுகிமிகக் கணவனுடன் பொய்ப்போல்பேசி யூராரையசசிக்குங் கொடியபாவி, அழுகாலம் வந்தடுத்தாற் கோதானங்களப் ரிமித மாய்சசெய்யினும் விடுமோபாபம், பட்டமுடன் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (92)

கணவனவன் தருமங்கள் செய்ய வெண்ணி சடுஞ்சினமாய்க் கூச்சலிட்டே கதறிவீழும், பிணமனையாள் செத்தெனவ விருந்துமென்ன மபயவளாலுனக் குவரும் புகழ்ச்சியென்ன, மணமுடையாளாலன்றோ வையமீது மாட்சிமையுமிகபரசாதனமும வாய்க்கும், பணியளவுந் திருவல்லிக் கேணிவாழும பார்ததனிட சாரதியைப் பணிகுவாயே (93)

புருஷர்க்கு வஞ்சகமாய்நடக்கும்பாவி பொல்லாத மூதேவி புழுத்தும்பனி, கர்ச்சித்து பருக்தோடு நாய்பிடுங்க மாட்டாமற்கண்டவாகளவரும்பச, அருச்சித்துமல்லவாளோ மறுபிறட்பி லையையோயிடுக்கங்கள் சொலலப போமே, பரிசமுறு திருவல்லிக் கேணிவாழும் பார்ததனிட சாரதியைப் பணிகுவாயே. ()

அருந்ததியைச் சாட்சிவைத்தே தாலிகட்டு மருமையுள்ள கணவனையே வகன்றதம்பேசி, பொருந்தும

னதின்படியே யுலகில்வேறே புருஷர்களை யிச்சித்தே திரிந்தபாவி, தெரிசதிருந்து மாவனுடனேயென்னநட்பு, சேனுலகில வாழ்வதாற் றீமையுண்டாம் பரிந்தவர்கட் கருள்புரியுந் திருவல்லிக்கேணிவாழும பார்த்தனிடசாரதியைப் பணிகுவாமே. (95)

ஸ்ரீங்காரஞ்செய்துபதி விரதையைப்போற் றேசுலவுஞ்சபைநடுவி னின்றுபேசி, போககாலத் தாலவனுமசலிற்போக புகதியில்லாதவனுடனே பொருந்தவென்னே, வாய்கொழுப்பாற் கண்டவரை வலுவிற்பேசி வலதுசொலு மூர்த்தி புழுத்துச்சாவாள், பாங்கான திருவல்லிக் கேணிவாழும பார்த்தனிட சாரதியைப் பணிகுவாமே. (96)

பூமியிலே பொல்லாத பாவியென்று புண்ணியர்களெல்லவரும் புகழப்பெற்றாய், காமினிசேருவது கபடமாக்கம கரையேற மாட்டாய்நீ கண்டுகொள்ளே, சீமையிலே யிராதுண்டே திரிபவற்கு சிலவழித்தாற்பொருளதனை மோட்சமுண்டு, பாலிக்குந்திருவல்லிக்கேணிவாழும பார்த்தனிடசாரதியைப் பணிகுவாமே. (97)

தருமமிகச் செய்தோர்க்குத் தாழ்விராது சற்குருவைநினைப்போர்க்கு குறைவிராது, மோக்கமுடனடப்போர்க்கு வாழ்விராது முன்னைகளுக்கிதபொருள் முன்வாராது, தீர்க்கமுள பெரியோர்களுக்குச் சினமிராது திறமையுள்ளோர் சொல்லென்றுந் தவிரமாட்டார், பாற்குலவுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாமே (98)

சௌரிதமிழ் படித்தவற்கு ஞானமுண்டாம் சந்ததியோடயிஸ்வர்யம் தழைத்துவோங்கும், எவர்களுமே கொண்டாடுமெ கீர்த்தியுண்டா மெழில்பார்த்தசாரதி துணையுண்டாகும, தவறிலா வாழ்வாரதியர்தவோரே சத்தியமாய்க் கலந்திருப்பார் வையகத்

தில், பரவிவளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்த
னிடசாரதியைப் பணிகுவாயே. (99)

சிங்காரமாயிலகுங் கருடன்மீது சிறப்புடனே பன்
னிரண் டாழ்வார்சூழ, பொங்குந்திருப்பாற்கடலிற்
சேடன்மீது புகழுமேவ பள்ளிகொளுமரங்கநாதனை,
செங்கண்மாற் றநுவலிக்கேணிதனனிற் றிகழ்பார்
த்தசாரதியே சிறியேனைறனனே, பங்கமிலாதருளுமதி
ருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்
பணிகுவாயே. (100)

## தனிவிருத்தம்

இசையோடுபாடுஞ் சங்கீதமதைவிட
பின்னதென்றறிவனோ குங்குமமதை
அசையாதேசுமந்திடுங் கழுதையெனினு
மதனழகையறியுமோ கற்கண்டுசுவையை
விசையாகவேபொழுங் காகமறியுமோநாய்
வீறுதேங்காயுருசியையறியுமோகுருடன்
உசிதமாணிக்க வொளியறிவனோகல்வி
யோங்குமார்பெருமைதனை மூடனறிவனே.

ஸ்ரீ பார்த்தசாரதிமாலை

முற்றிற்று.

---

